# குருவே சரணம்

குருவே நிம் பாதங்கள் சரணம் - விராஜேஷ்வர
குருவே நிம் பாதுகைக்கு சரணம்
குருவே நிம் பாதங்கள் சரணம் - விராஜேஷ்வர
குருவே நிம் பாதுகைக்கு சரணம் சரணம்

கொண்டவர்க்கு ராமராய் காட்சி தந்தீர்
குரு பூர்ணிமாவில் வியாசராய் காட்சி தந்தீர்
வானத்தில் எல்லையின்றி காட்சி தந்தீர்
குரு வித்யானந்தராய் காட்சி தந்தீர் (1)

பக்திக்கு மொழி இல்லை என்றுணர்த்தி
அந்த பக்தியை அருளிய பரம குருவே
பக்தியும் நீவே அந்த மொழியும் நீவே
என்ற போதத்தைத் தந்திட்ட ஞான குருவே (2)

போதும் போதும் சம்சாரம் என்று
பந்தத்தில் சிக்கிய சீடர்களை
அந்த பந்த வலையினின்று மீட்டி அந்த
பந்தமும் நீர் என போதித்த குருவே (3)

நான் மெய் அல்ல என்ற மெய்யை
நாளும் மனனம் செய்ய வைத்து
தானே தன்மயமாக நின்று
தன்மயம் நம்மையும் ஆக்கிடும் குருவே (4)

த்வைதம் தவறில்லை என்றுரைத்து
அத்வைதத்தை உணர்த்திய எங்கள் குருவே
அகந்தை நான் என வந்தவரின்
அஹம்காரத்தை அழித்திட்ட அஹத்தின் பொருளே (5)

நானே நீ என கூறிய குருவே
நிம்மைக் காணவே தவம் என்ன செய்துவிட்டோம்
நிம்மைக் கண்டெங்கள் பாவத்தைப் போக்கி
நிம் பாதுகை அருளாலே பக்தியும் பெற்றோம் (6)

பயம் என்று வந்தேன் பயமேன் என்று
பயத்தைப் போக்கி பக்தியைத் தந்தீர்
பயமே வேண்டாம் குருவருள் உண்டென
பயம் நீக்கி அபயம் தந்திட்ட குருவே (7)

தக்ஷிணாமூர்த்தியின் மௌனம் நீவே
தவ ஆதிசங்கரர் வாக்கும் நீவே
அண்ணாமலையின் மஹரிஷி நீவே
அணுசோனியின் வாழ்ந்திடும் எங்கள் குருவே (8)

பயமும் நீவே அபயமும் நீவே
பந்தமும் நீவே பக்தியும் நீவே
த்வைதமும் நீவே அத்வைதமும் நீவே
திவ்ய ரூபமும் நீவே ஸ்வரூபமும் நீவே (9)

இங்கும் அங்கும் எங்கும் நீவே
இறையருள் நீவே வந்தருள் வீரே
இன்றும் அன்றும் என்றும் நீவே
இன்பமும் நீவே பேரானந்தம் நீவே (10)

**Title : Guruve Saranam**
**Composed by : Shree Mata Swadhaa Devi**
**Sung by : Aishwarya Srinivasan**
**To download or to listen, visit**
**https://hamsaashramam.org/guru-parampara/mathaji**